Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 67 கர்த்தாவே, என் வார்த்தைகளுக்குச் செவி கொடும், என் தியானத்தைக் கவனியும் சங்.5:1 ஜனவரி 2021 No.1

நியாயத்தீர்ப்பின் மத்தியில் ஆண்டவருடைய இரக்கத்தைத் தேடுங்கள்

Seek the Lord's mercy in the midst of judgement

John Newton

"யாருக்குத் தெரியும்; நாம் அழிந்து போகாதபடிக்கு ஒரு வேளை தேவன் மனஸ்தாபப்பட்டு, தம்முடைய உக்கிரகோபத்தை விட்டு, திரும்பினாலும் திரும்புவார் என்று சொல்லச் சொன்னான்"

தேவனுடைய நியாயத்தீர்ப்பு மக்கள் பாவ உணர்வு அடைவதற்கு ஏதுவாகி, அவர்கள் தங்களைத் தாழ்த்தி, மனந்திரும்புதலோடு ஜெபித்தால் அவர் தம் இரக்கத்தால், கூறிய தீங்கை மாற்றுவதுண்டு. யோனா நினிவே மக்களுக்கு அளித்த செய்தி இத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது. நினிவேயின் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பிய போது தேவன், தான் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைச் செய்யாதிருந்தார்.

நினிவே மக்களைப் போல நாம் தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தாவிட்டால் மத்.12:41-ன் படி, நினிவேயின் மக்கள் நமக்கு விரோதமாக எழும்பி நின்று நம்மைக் குற்றஞ்சாட்டுவார்கள் என்ற பயம் இருக்கிறதா? ஒரே ஒரு முறை யோனாவின் பிரசங்கத்தைக் கேட்ட அவர்கள் உடனே மனந்திரும்பி, தேவனுடைய இரக்கத்தைத் தேடினார்கள். தீர்க்கதரிசி திட்டமாக அறிவித்த அழிவு மாற்றப்படும் நம்பிக்கை உண்டா? உண்டு. கிருபாசனத்தின் முன் கிட்டிச் சேர வேண்டும். இஸ்ரவேலைப் போல ஜெபத்தின் மூலம் தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொள்ள வேண்டும் ஆதி.32:28. ஆனால் மனந்திரும்ப அளிக்கப்படும் வாய்ப்பினை பயன்படுத்தாமலிருக்கிறோமா?

தேவனுடைய நியாயத்தீர்ப்பு

தேவனுடைய நியாயத்தீர்ப்பு இன்று உலக முழுவதும் பரவியிருக்கிறது. அவருடைய கரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. கவலையீனமாயிருக்கிறீர்களா அல்லது பிடிவாதமாயிருக்கிறீர்களா? விரைவில் தண்டனையைக் காணப் போகிறீர்கள். மகாப் பெரியவராகிய நமது தேவனுக்கு பூமியின் குடிகளோடு வழக்கு இருக்கிறது (எரே.25:31,ஓசியா.4:1) அவர் தமக்காக வழக்காடப் போவது நிச்சயம். அப்போது நியாயத்தீர்ப்பின் மூலமாகவோ, தமது இரக்கத்தின் மூலமாகவோ அவரே ஆண்டவர் என்பதை ஜனங்கள் அறிந்து கொள்வார்கள். "..... நானே தேவனென்று அறிந்து கொள்வார்கள்" யாத்.6:7; எசேக்.25:11.

ஜனங்கள் தேவனைப் புறக்கணித்தனர். தங்கள் கட்டுப்பாட்டினை இழந்த அவர்கள் தங்கள் இருதயத்தின் இச்சைகளின்படி நடந்தனர். நரகமே அவர்களுக்குப் பயங்கரமான நியாயத் தீர்ப்பாகிவிட்டது.

நமது பாவங்களும் பிறருடைய பாவங்களும்

நமது எண்ணங்களாலும், வார்த்தைகளாலும், செயல்களாலும் அநேக பாவங்களை நாம் செய்கிறோம். அவரது சொந்த ஜனங்களாகிய நமது மீறுதல்கள் ஏராளம். ஆனால் அவரது நற்குணம் அவர் நம்மைத் தண்டிக்காமல் தடுக்கிறது. கர்த்தாவே நீர் அக்கிரமங்களைக் கவனித் திருப்பீரானால் யார் நிலைநிற்பான். ஆண்டவரே, உமக்குப் பயப்படும் படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு சங்.130:3-4.

ஆனால் தங்கள் பாவங்களின் பெருக்கத்தையும், உச்சகட்ட நிலையையும் ஏசாயா போன்றவர்கள்தான் உணரவும் ஒப்புக்கொள்ளவும் கூடும். "ஐயோ, நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன் ....." ஏசா.6:5.

உண்மையின்மை, அராஜகம், வாக்குகளை மீறுதல், தூய்மைக்கேடு, தேவனை ஆராதிப்பதில் நிர்விசாரம் போன்றவை பெருகிவிட்டன. தேவனுடைய பிரமாணங்களும், தேசத்தின் சட்டங்களும் எல்லா நிலைகளிலும் மீறப்படுகின்றன. ஒரு நாள் தேவன் ஜனங்கள் அழுதுபுலம்பும்படி அழைத்தார். ஆனால் அவர்களோ கலகம் செய்யும் நிலையில் காணப்பட்டனர் ஏசா.12.12-13. தேவனுக்கு எதிரான நிலைதான் அதிகாரங்களுக்கு எதிர்த்து நிற்கும் பாவத்தை உருவாக்குகிறது. தேவனுடைய கிருபை ஒன்றே தேசங்களைப் பாதுகாக்க முடியும்.

கர்த்தரில் தைரியமாயிருங்கள்

நமது பாவங்களுக்காகப் புலம்பி அழவும், தண்டனைக்குப் பாத்திரர் என்பதைத் தாழ்மையுடன் அறிக்கையிடவும் பின்வாங்க வேண்டாம். நமது தேவன் இரக்கம் மிகுந்தவர். யாருக்குத் தெரியும்? அவர் இரக்கங்கொண்டு, தமது கோபத்தை விட்டுவிட்டு அழிவை நம்மைவிட்டு விலக்கலாமே.

நமது ஜெபம் உத்தம மனந் திரும்புதலைத் தருமானால் நமக்கு நிச்சயம் நம்பிக்கையுண்டு என்பதை வேதம் வெளிப்படுத்துகிறது. பாவத்தாலும் அதனால் வரும் விளைவுகளாலும் தேவன் துக்கமடைகிறார். அவருக்கு முன்பாக நடுக்கத்தோடு வர தைரியத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அவர் நம்மை நேசித்து நமது பாவங்களுக்காக மரித்தவர்; மகிமையின் ஆண்டவர். வானத்திலும் பூமியிலுமுள்ள சகல அதிகாரமும் அவருக்குக் கையளிக்கப்பட்டுள்ளன. "கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார், ஜனங்கள் தத்தளிப்பார்களாக" சங்.99:1. சத்துரு வெள்ளம் போல் வரும்போது, அவர் அவனுக்கு எதிராகக் கொடியேற்றுவார் ஏசா.59:19. புயல்வீசும் கடலுக்கு அவர் எல்லைகளை நியமித்திருக்கிறார் (யோபு.38:8-11 படிக்க) இவ்வாறு மக்களின் அமளியையும் அவர் அடக்குவார் சங்.65:7.

தேவனை அறியாத மக்களுக்காக நீ கதறி ஜெபிப்பது நல்லதுதான், ஆனால் தேவபயம் உன்னில் இருந்தால் மட்டுமே அவர் உனக்குப் புகலிடமாயிருப்பார். உன் இருதயம் சமாதானத்தால் நிரப்பப்பட்டிருக்கும் 'பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும் நாம் பயப்படோம்" ஏசா.8:13,14; சங்.46:2.

நம்பிக்கையுடன் ஜெபியுங்கள்

நமது அரைகள் கட்டப்பட்டதாகவும், விளக்குகள் எரிகிறவைகளாகவும், எப்போது அவர் வந்தாலும், அவரைச் சந்திக்க ஜெபத்தில் விழித்திருந்து காத்திருப்போம் (மாற்.13:35; 14:38) நாம் எருசலேமின் சமாதானத்திற்காகவும், தேவனுடைய சபைக்காகவும், சுவிசேஷம் பரப்பப்பட்டு அவரது ராஜ்யம் விஸ்தாரமடையவும் ஜெபித்துக் கொண்டேயிருக்க வேண்டும். அப்

(3-ம் பக்கம் பார்க்க)

அன்பான வேண்டுகோள்

வங்கி வழியாக காணிக்கை அனுப்பினால் தயவு செய்து உடனே எங்களுக்கு தெரியப் படுத்துங்கள்

மொபைல் : 95432 21008
வாட்ஸ்ஆப் : 94897 40295

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

இம்மாத பொன்னான சிந்தனை

நீ பயப்படாதே

கேரள மாநிலத்தில் இயற்கை அழகு மிக்க மலைகளும், காடுகளும் நிறைந்த வயநாடு மாவட்டத்தில் கடந்த 2019-ம் ஆண்டு நவம்பர் மாதம் இங்குள்ள காட்டுப்பாதை வழியாக இருவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது ஒரு பெரும் புலி இவர்களை துரத்த ஆரம்பித்தது. புலி பின்னால் அமர்ந்தவருக்கு மிகவும் அருகே வந்துவிட்டதால் அவர் மிகவும் அதிர்ச்சியும் பயமும் அடைந்துவிட்டார். ஆயினும் வாகனத்தை ஓட்டிய நண்பர் அவரிடம் நண்பா, "நீ பயப்படாதே; என்னை மட்டும் இறுக்கமாகப் பிடித்துக்கொள்" என்று கூறி வெகு கவனமாகவும் வேகமாகவும் வாகனத்தை ஓட்டிச் சென்றார். துரத்தி வந்த புலி பெருத்த ஏமாற்றத்துடன் காட்டுக்குள் சென்று மறைந்துவிட்டது. கர்த்தருக்குள் பிரியமானவர்களே, ஒரு வேளை நாம் தற்போது வாழ்வின் ஆபத்தான, கவலையின் பிடியில், இருளின் ஆதிக்கத்தில், சாத்தானின் பயமுறுத்தலான, வேதனையான, துக்கமாக, வியாதியின் மத்தியில் சென்று கொண்டிருக்கலாம். ஆனாலும் தமது புனித இரத்தத்தால் நம்மை மீட்டுக் கொண்ட நமதருமை ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம்மிடம் என்ன கூறியிருக்கிறார்? "நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் .... உனக்குச் சகாயம் பண்ணுவேன்; ..... உன்னைத் தாங்குவேன்" என்ற இந்த அருமை வாக்குத்தத்தத்தை நாம் ஏசாயா 41-ம் அதிகாரம் 10-ம் வசனத்தில் வாசிக்கிறோம். இந்த வாக்குத்தத் தத்தின்படி புதிய வருடத்தில் பிரவேசிக்க தேவன் தாமே நமக்கு கிருபை செய்வாராக.

வாக்குத்தத்தம்

அப்பொழுது விடியற்கால வெளுப்பைப் போல உன் வெளிச்சம் எழும்பி, **உன் சுகவாழ்வு** சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்.

அப்பொழுது நீ கூப்பிடுவாய், கர்த்தர் மறு உத்தரவு கொடுப்பார்; நீ சத்தமிடுவாய்; இதோ, நான் இருக்கிறேன் என்று சொல்லுவார்.

..... அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும் ஏசாயா 58:8, 9, 10.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2021 ஜனவரி மாத தூதனுக்காக என் தேவனை அதிக நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். முதலாவது வாசகருக்கு எங்கள் அன்பான **புத்தாண்டு 2021 வாழ்த்துக்கள்** என மிகுந்த ஜெபத்துடன் நாங்கள் வாழ்த்துகிறோம்!

"வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது" சங்.65:11. "உச்சிதமான கோதுமையினால் அவர்களைப் போஷிப்பார்; கன்மலையின் தேனினால் உன்னைத் திருப்தியாக்குவேன்" சங்.81:16. இவைகள் மகாபெரிய தேவனுடைய மாறாத வாக்குத்தத்தங்கள்; ஆனால் இவைகள் நிறைவேற நாம் செய்ய வேண்டியவைகளையும் தேவன் அவருடைய புஸ்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார்.

"இந்த நியாயப் பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டு பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்ய கவனமாயிருக்கும்படி, **இரவும் பகலும்** அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய் யோசுவா.1:8.

இந்த மாதம் சில அறிவிப்புகளை மாத்திரம் கீழே அச்சிடுகிறேன் :

"2021" ஆண்டவரோடு நேரம் செல்விடும் ஆண்டு

"2021" Year of spending time with the LORD

1. தமிழ்நாட்டைச் சார்ந்த பாஸ்டர் ஜாண் இளங்கோவன் அவர்கள் முழு இரவு ஊழியங்களில் எங்களோடு இணைந்து செயல்பட்டவரும், **"தேவன் தேடும் மனிதன்"** என்ற அருமையான புத்தகத்தை எழுத ஆவியானவரால் பயன்படுத்தப்பட்ட வருமாவார். அவருடைய திருமண ஆராதனையில் எனது தகப்பனார், காலஞ்சென்ற பாஸ்டர் **S. தேவதாசன்** அவர்கள் பிரசங்கித்தார்கள் என்று அவரே என்னிடம் நேரில் கூறினார். பிற்பாடு கர்நாடகா மாநிலம் சென்று Indian Christian Revival Movement என்ற பெயரில் ஏராளமான சபைகளை ஸ்தாபித்தார். அவருடைய சென்ரல் சபையில்தான் (Central Church) நாம் உபவாச ஜெபத்தை நடத்தினோம். அவர் 2020 செப்டம்பர் மாதம் கொரோனா வியாதியால் மரித்து போனதாக கேள்விப் பட்டோம்.

2. மதுரையில் ஊழியம் செய்யும் கனத்துக்குரிய போதகர் பெஞ்சமின் ஆதாம் அவர்கள் குடும்பமே கொரோனா வியாதியால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், மகன் மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் முதலாவது தகவல் வந்தது. நவம்பர் 22-ம் தேதியில் மகன் மரித்து போனதாக கேள்விப்பட்டோம். இந்தச் செய்தியை எழுதும் சமயம் போதகர் சுகமாகி வீட்டிற்குச் சென்றதாக அறிகிறோம்.

இப்படிப்பட்ட செய்திகளை கேட்டு மிகவும் கலங்கி, வருந்துகிறோம். தங்களுக்கு அருமையானவர்களை இழந்து துக்கத்தோடு இருக்கும் தேவ மக்களை தேவன் ஆறுதல் படுத்துவாராக.

3. **"ஜாமக்காரன்"** பத்திரிகையில் வாசித்த சாட்சி:

கொரோனா கிருமி தாக்குதல் என்னையும் விட்டு வைக்கவில்லை. 150 நாட்கள் நான் எங்கும் வெளியே போகாமல் வீட்டுக்குள்ளேயே அடங்கி இருந்தும் எப்படியோ என்னை நிமோனியா வியாதி பிடித்தது. வெளி அடையாளங்கள் எதுவும் இல்லாமல் இருமல் தும்மல் சளி தொல்லை எதுவும் இல்லாதிருந்தும் ஒரு பரிசோதனைக்காக ஸ்கேன் எடுத்துப் பார்த்தார்கள். நுரையீரலில் ஒரு சிறு பகுதி சளி மூடியிருந்தது. நுரையீரலின் அடிபாகத்தில் ஒரு கோடு போட்டது போல் கொரோனா கிருமி இருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டது.

(7-ம் பக்கம் பார்க்க)

❖ **வருகையின் தூதன்** ஊழியங்களுக்காக தினந்தோறும் ஜெபியுங்கள், மாதந்தோறும் தாங்குங்கள்.

❖ **வருகையின் தூதன்** ஊழியங்களுக்கு வருடத்திற்கு ஒருமுறை மாத்திரம் காணிக்கை அனுப்புவோர் குறைந்த பட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.

● **கடிதங்கள், மணியாடர்கள்** அனுப்பவேண்டியமுகவரி

வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில்-629001
VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008, 9489740295, **e-mail:**varukayinthoothan@hotmail.com

● **காசோலை** *(Cheque & Draft)*

வெஸ்லி தேவதாசன் என்ற பெயருக்கு மட்டும் அனுப்பும்படி அன்பாய் கேட்கிறேன்.

● **வங்கி** வழியாய் காணிக்கை அனுப்புவோர் (Net Banking) தயவாய் உடனே எங்களுக்கு SMS அனுப்புங்கள், அல்லது அலுவலக செல் நம்பர் **95432 21008** வழியாக தெரிவியுங்கள்.

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Mead Street, Ngl-1 IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Court Road, Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, W.C.C. Road, Ngl-1 IFSC Code : **CNRB0000033**

(1-ம் பக்க தொடர்ச்சி)

போது அவரது சிறந்த நாமம் "சூரியன் உதிக்கும் திசை தொடங்கி, அது அஸ்த மிக்கும் திசைவரைக்கும் ஜனங்களுக் குள்ளே மகத்துவமாயிருக்கும்" மல்கி.1:11. உலகமே அவரது மகிமையால் நிரம்பி யிருக்கும்.

பரம ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபிப்போம். அது நமது ஆட்சியாளர் கள், அரசு அதிகாரிகள், சபைத்தலைவர் கள் எல்லார் மேலும் வர வேண்டும். நாம் சமாதானமாகவும் அமைதலாகவும் வாழ அதிகாரிகளுக்காக ஜெபிப்பது மிக அவசியம்.

விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும்

நமது ஜெபத்திற்குப் பதிலாக தேவன் எவ்வளவு பெரிய காரியங்களைச் செய்கிறார்! எசேக்கியா ராஜா எதிரி களால் பயமுறுத்தப்பட்ட போது ஆலயத்திலே சென்று கடிதத்தை விரித்து ஜெபித்தான். அசீரியரின் சேனை பனி போல் மறைந்ததை ஏசா.37:14-36 வசனங் களில் படிக்கிறோம்.

இன்று நாம் இத்தகைய சூழலில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கிறிஸ்தவர்கள் பயமுறுத்தப்படுகிறார் கள். எதிரி கோபாவேசத்துடன் நிற்கி றான். நமது பாவங்களும் நமக்கு எதிராக நிற்கின்றன. நாம் செய்ய வேண்டியது என்ன? நம்மை தேவனுக்கு முன்பாகத் தாழ்த்தி இரக்க ஆசனத்துக்கு முன்பாக வந்து கெஞ்சினால் எந்த மனிதரும் செய்யமுடியாத உதவியை அவரிடம் பெறலாம். எந்த சத்துவமும் நம்மை மேற்கொள்ள முடியாது.

கிருபாசனத்தைக் கிட்டிச் சேருகிற நீங்கள் தேவமகிமையை நாடுங்கள். தேசத்தை நேசியுங்கள். சாட்சியாக வாழுங்கள். தேசத்திற்காகத் திறப்பின் வாயிலே நில்லுங்கள். **பத்து நீதிமான்கள் இருந்திருந்தால் சோதோம் அழிவுக்குத் தப்பியிருக்கும்** ஆதி.18:32.

பரிசுத்தப்படுத்தும் ஆவியானவரின் அக்கினி

The purging fire of the Spirit

Oswald Sanders (1902-1992)

வேதபகுதி : 1 ராஜா.18:1-10

இஸ்ரவேலின் சரித்திரத்தில் வரும் யெகோவாவின் தீர்க்கதரிசிகளில் மிக முக்கியமானவன் எலியா. அரசிய லின் இக்கட்டான காலகட்டத்தில் தெய்வீக உரிமையைப் பெற்று அவன் வெளிப்படுகிறான். அதுபோலவே திடீரென ஒரு அக்கினி இரதத்தில் சுழல்காற்றில் மறைந்து போகிறான். புதிய ஏற்பாட்டில் மற்ற தீர்க்கதரிசிகளைவிட இவனைக் குறித்து அதிகமாகக் கூறப்பட்டுள்ளது. விக்கிரக ஆராதனை நிறைந்த தேசத்துக்கு நியாயத்தீர்ப்பாக மூன்றரை ஆண்டுகள் மழை பெய்வதில்லை என்ற தீர்க்க தரிசனத்துடன் முதலாவது தோன்று கிறான்.

எலியாவின் குணநலன்கள் சுருக்கமாக 1 ராஜா.18:36-ல் எழுதப் பட்டுள்ளது. அவனுடைய விசேஷித்த ஜெபம் 1 ராஜா.18:36-ல் காணப்படுகிறது. "ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோ புக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ர வேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படி செய் தேன் என்றும் இன்றைக்கு விளங்கப் பண்ணும்". தேவ மகிமைக்காகப் பற்றி யெரியும் ஆவல் அவனிடமிருந்தது. தேவ மகிமை அவனுடைய முதல் நினை வாகவும், தேவ நாம மகிமைக்கான வாஞ்சையால் அவனது ஆத்துமா நிரம்பி வழியும் அனுபவம் அவனிடத்தி லிருந்தது.

யெகோவாவின் அடிமையாயிருக்க விரும்பினான்

அவன் தான் தேவனுக்குச் சொந்தமானவன் என்பதை ஒப்புக் கொண்டான். எனவே, 'நான் உமது ஊழியக்காரன்' என்று தன்னை வெளிப் படுத்துகிறான். தெய்வீகக் கட்டளை களுக்கு அவன் முற்றிலும் கீழ்ப்படிந் தான். எனவே, உம்முடைய வார்த்தை யின்படி செய்தேன் என்று உறுதிப்பட கூறுகிறான்.

தேசத்தில் காணப்பட்ட விசுவாச துரோகம் மீதுள்ள ஆழமான கரிசனை தான் இந்தப் பெரிய சவாலை ஏற்கச் செய்தது. இஸ்ரவேலிலே மிகப் பொல் லாத ராஜாவாகிய ஆகாப் சிங்காசனத்தி லிருந்தான். அவனது வாழ்வைக் குறித்து, "உம்ரியின் குமாரனாகிய ஆகாப் தனக்கு முன்னிருந்த எல்லாரைப் பார்க்கிலும் பொல்லாப்பானதைச் செய்தான்" 1 ராஜா.16:30 என்று படிக்கிறோம். அவனது பாவம் 31;32 வசனங்களில் எழுதப்பட்டுள்ளன. யெகோவாவுக்குப் பதிலாக பாகால் தெய்வமாக்கப்பட்டது. உண்மையான மார்க்கமும், நல்லொழுக் கமும் தேசத்தில் காணாமற் போய் விட்டன. இந்நிலையில் தான் எலியா இஸ்ரவேலின் சரித்திரத்தில் பிரவேசிக் கிறான்.

அக்கினி இறங்கி வருவதற்கான சவால்

அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் 1 ராஜா. 18:24. இதுதான் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட நிபந்தனை. யெகோவா வணக்கத்தையும் பாகால் வணக்கத் தையும் சமரசம் செய்ய முடியாது. அவை ஒன்றாக இணைய முடியாது. தேவன் காலத்துக்கேற்ற மக்களை எழுப்பி, அவர்களை ஆயத்தப்படுத்தி பயன் படுத்துகிறார். லூதர், கால்வின், வெஸ்லி, உவைட் ஃபீல்டு, மூடி, ட்டாறி, கிரஹாம் போன்ற சாட்சிகளை எழுப்பி இன்று பயன்படுத்துகிறார். அன்று எலியா பயன் படுத்தப்பட்டான்.

கர்மேல் பர்வதத்தில்தான் அவனது பண்பின் உச்சக்கட்ட மகிமை விளங்குகிறது. அவன் நம்மைப் போல் பாடுள்ள மனுஷன்தான் யாக்.5:17. ஆனால் அவன் விசுவாசத்திலும் தைரியத் திலும் அவனுக்கு இணை அவனே. தனது தேவனோடும் பாகாலோடும் பலப் பரீட்சை நடத்த சவால் விடுகிறான். பாகால் அக்கினியின் தெய்வம். எனவே அக்கினியே சோதனைப்பொருளாக எடுக்கப்பட்டது. "அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம்" 1 ராஜா.18:24. யாரும் எதிர்க்க முடியாத பொருத்தமான ஆலோசனை. 'கர்த்தர் தெய்வமானால் கர்த்தரைப் பின்பற்றுங் கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள்' உச்சக்கட்ட வேளை வந்துவிட்டது.

அக்கினியின் முக்கியத்துவம்

'அப்பொழுது கர்த்தரிடத்தி லிருந்து அக்கினி இறங்கியது' வச.38. அக்கினி தேவபிரசன்னத்தைக் காண்பிக் கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் அக்கினி யைக் கொண்டு பரிசோதிப்பது பழக்க மானது. அவர்களது தேச சரித்திரத்தில் தேவன் பல தருணங்களில் அவர்களுக்கு அக்கினியால் பதிலளித்திருக்கிறார்.

தேவன் மோசேக்கு தமது பிரசன்னத்தை எரிகிற முட்செடி மூலம் வெளிப்படுத்தினார். 'அங்கே கர்த்தரு டைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜ்வாலையிலே நின்று அவனுக்கு தரிசனமானார்..... தேவன் அவனை நோக்கி : மோசே மோசே என்று கூப் பிட்டார் யாத்.3:2-4. சீனாய் மலையிலும் தேவபிரசன்னம் அக்கினி மூலமாக வெளிப்பட்டது. "கர்த்தர் சீனாய் மலையின் மேல், அக்கினியில் இறங்கின படியால், அது முழுவதும் புகைக்காடாய் இருந்தது" யாத். 19:18. தேவ ஜனங்கள் மத்தியில் அவரது பிரசன்னம் இரவில் கூடாரத்தின் மேல் அக்கினியாய் விளங்கியது. "..... கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று..... இரவில் அக்கினியும் வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருந்தது" 40:34-38. சாலோ மோன் தேவாலயத்தைப் பிரதிஷ்டை செய்தபோது தேவ பிரசன்னம் இவ்வாறு வெளிப்பட்டது :"சாலொமோன் ஜெபம் பண்ணி முடிக்கிற போது, அக்கினி வானத்திலிருந்து இறங்கி .... கர்த்தரு டைய மகிமையும் ஆலயத்தை நிரப் பிற்று" 2 நாளா.7:1. அக்கினி தேவ பிரசன்னத்திற்கு அடையாளம்.

இவ்வாறு பழைய ஏற்பாட்டில் அக்கினி தேவ பிரசன்னத்திற்கு அடை யாளமாயிருந்தது போல புதிய ஏற்பாட் டின் காலத்தில் அது தூய ஆவியானவரின் பிரசன்னத்தையும் வல்லமையையும் காண்பிக்கிறது. மேசியாவின் ஊழியத் தைக் குறித்து முன்னறிவித்த யோவான் ஸ்நாபகன் "அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ் நானம் கொடுப்பார்" மத்.3:11 என்று கூறி அறிவித்தான். பெந்தெகொஸ்தே நாளில் மேல்வீட்டில் கூடியிருந்த சீஷர்கள்மேல் தூய ஆவியானவர் வல்லமையாக இறங்

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

கினார். அப்போது, "அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர் மேலும் அமர்ந்தது" அப். 2:3.

எலியாவின் நாட்களில் தூய அக்கினி யெகோவாவின் பீடங்களிலிருந்து நீக்கப்பட்டு பொய்யான அக்கினி பாகாலின் பீடங்களில் எரிந்தது. மகிமை எடுக்கப்பட்டுப் போயிற்று. நாதாபும் அபியுவும் அன்னிய அக்கினியை கர்த்தருக்கு முன்பாகப் படைத்த போது அவர்கள் மரித்தார்கள் லேவி.10:1. உண்மையான தேவ அக்கினிக்கு இணையானது ஏதுமில்லை.

இந்நாட்களில் தனி கிறிஸ்தவ நபர்களிலும், சபைகளிலும் குறைபடுவது தூய ஆவியானவரின் பிரசன்னமும் வல்லமையும்தான். அவை அக்கினியாக வெளிப்படவில்லை. மக்களை இழுத்துக் கொள்ளும் அளவில் அக்கினி எரியாததால், அழிந்து கொண்டிருக்கும் உலகத்திற்குக் கிறிஸ்தவனோ சபையோ எந்தத் தாக்கமும் ஏற்படுத்த முடியவில்லை. பெரிய ஸ்தாபனங்கள், அறிவுமிக்க ஊழியங்கள், எண்ணற்ற ஊழியர்கள், சிறப்பான வழிமுறைகள் போன்ற வற்றிற்குக் குறைவில்லை. ஆனாலும் உலகத்தை சீர்படுத்த எந்த முயற்சியும் பயன்தரவில்லை. "கர்த்தாவே, அக்கினியை அனுப்பும்" என்று ஜெபிப்போம். இது ஒன்றுதான் இந்த நாட்களின் தேவை.

அக்கினி இறங்குதல்

1 ராஜா.18:38-ல் "அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து அக்கினி இறங்கி ....." என்று படிக்கிறோம். அக்கினி இறங்கியது தான் கர்மேல் பர்வதத்தில் நடந்த உச்சக்கட்ட நிகழ்ச்சி. முன்பு செய்யப்பட்டவைகளெல்லாம் ஆயத்தங்கள் மட்டுமே. ஆவிக்குரிய எழுப்புதலுக்கும் ஆயத்தம் தேவை.

அக்கினி எப்போது இறங்கியது? தேசம் விசுவாசதுரோகத்தாலும் விக்கிரக வணக்கத்தாலும் நிரம்பியிருந்தது என்பது தெளிவாகத் தெரிகிறது. யெகோவா வணக்கம் குன்றி பாகால் வணக்கம் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டது. ஆவிக்குரிய அந்தகாரம் தேசத்தை மூடிக்கொண்டது. அந்தகாரம் அதிகரிக்கும்போதுதான் வெளிச்சம் அதிகமாகத் தேவைப்படுகிறது. ஆனால் எவரும் அதைக்குறித்து அக்கரை கொள்ளவில்லை. எனவே சாத்தானின் ஆதிக்கம் பரவிக்கிடக்கிறது. சபை தேசத்தின் மேல் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை.

எலியா எந்தத் திகைப்புமின்றி தேவனுக்குக் கீழ்ப்படிந்தபோது அக்கினி இறங்கியது. அவனுடைய கீழ்ப்படிதல் குறிப்பிடத்தக்கது. 1 ராஜா 17:3,5 வசனங்களில் தேவன் அவனிடம் 'நீ போய் கேரீத் ஆற்றங்கரையில் ஒளித்துக் கொண்டிரு' எனக் கட்டளையிட்டதையும் அவன் உடனே கீழ்ப்படிந்து கர்த்தருடைய வார்த்தையின்படியே "யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையிலே தங்கியிருந்தான்" என்பவைகளைப் படிக்கிறோம். பின்பு இன்னொரு கட்டளை வருகிறது. "நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி" 1 ராஜா. 18:1. தனக்கு பயங்கர எதிரியான ஆகாபை சந்திப்பது விரும்பப் படத்தக்கதல்ல. மூன்று ஆண்டுகளாக எலியாவின் உயிரைப் பறிப்பதற்காகத் தேடிக் கொண்டிருந்தான் ஆகாப் ராஜா. எலியாவின் ஜெபத்தால் வானம் அடைபட்டு மழை பெய்யாதபடி தடுக்கப் பட்டு பூமி வறட்சியானதை அவன் மனதில் வைத்திருந்தான். இந்நிலையில் எலியா கீழ்ப்படிந்து அவனை சந்திக்க வேண்டும்.

"எலியா ஆகாபுக்குத் தன்னை காண்பிக்கப் போனான்" 18:2. எனவே அக்கினி இறங்கியதும், பின்பு தேசத்தில் மழை வந்ததும் எலியா தேவனுக்குக் கீழ்ப்படிந்ததால் ஏற்பட்ட விளைவுகள் என்பதனை மறுக்க முடியாது. அவன் ஆகாபை சந்தித்ததை ஆவிக்குரிய சன்மார்க்க தீமைகளை சந்திப்பதற்கு ஒப்பிடலாம். தேவனுக்குக் கீழ்ப்படியாத ஏதேனும் ஒரு பகுதி நம் வாழ்வில் காணப்பட்டால் அக்கினி இறங்குவதை எதிர்பார்க்க முடியாது. நல்மனம் பொருந்துவதிலோ, மன்னிப்புக் கேட்பதிலோ, சாட்சி சொல்லுவதிலோ நாம் கீழ்ப்படிய மறுத்தால் கீழ்ப்படியுமட்டும் ஆசீர்வதிக்கப்பட முடியாது.

தகர்க்கப்பட்ட பலிபீடங்கள் செப்பனிடப்பட்ட பின்புதான் அக்கினி இறங்கியது. "தகர்க்கப்பட்ட பலி பீடத்தை அவன் செப்பனிட்டு" (18:30) பலிபீடம் ஆராதனையைக் குறிக்கிறது. கர்மேல் பர்வதம் தேவஜனங்கள் கூடுமிடத்தைக் காண்பிக்கிறது. பலிபீடம் பயன்படுத்தப்படாமலும் யெகோவா ஆராதிக்கப்படாமலும் இருந்தபடியால் திரும்பக் கட்டப்பட வேண்டியதாயிருந்தது. அவன் பன்னிரண்டு கற்களை எடுத்தான். வடதென் இராஜ்யங்களின் பிரிவை அவன் கருத்தில் கொள்ளவில்லை. தேவ சமூகத்தில் ஜனங்கள் இணைக்கப்பட வேண்டும் என்பது அவனது நோக்கம். ஜனங்களின் ஆவிக்குரிய ஐக்கியம் அக்கினிக்கு இன்றியமையாதது. பலிபீடம் கிறிஸ்துவின் சிலுவையைக் குறிக்கிறது. சிலுவைக்கு முக்கியத்துவம் கொடுத்தால் மட்டுமே அக்கினி இறங்க முடியும்.

பலிப்பொருள் பலிபீடத்தில் படைக்கப்பட வேண்டும். "விறகுகளை அடுக்கி, ஒரு காளையை சந்து சந்தாகத் துண்டித்து, விறகுகளின் மேல் வைத்தான்" வச.33.

வெறுமையான பலிபீடத்தின் மேல் அக்கினியை எதிர்பார்க்க முடியாது. வாழ்வு முழுவதும் அர்ப்பணிக்கப்பட வேண்டும். அந்த அர்ப்பணம் நீட்டிக்க வேண்டும். Frances Ridley Hergal தமது அர்ப்பணப் பாடலில் எந்தன் ஜீவன் என்று ஆரம்பித்து, தனது கரங்கள், கால்கள், குரல், அன்பு போன்ற அனைத்தையும் அர்ப்பணம் செய்து பாடுகிறார். அரைகுறையான அர்ப்பணம் தேவனுக்கு ஏற்புடையதல்ல. அனனியா சப்பீராள் என்ற தம்பதிகள் நிலத்தை விற்ற கிரயம் அனைத்தையும் கொடுப்பது போல காண்பித்துவிட்டு ஒரு பகுதியை தங்களுக்காக வைத்துக் கொண்டனர். அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட பயங்கர முடிவை நாம் அறிவோம். விசுவாசத்தின்மேன்மையால் தான் பெற்ற ஒரே மகன் ஈசாக்கைப் பலியிட ஆபிரகாம் ஆயத்தமானபோது "நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியால் உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" ஆதி.22:18 என்ற ஆசீர்வாதத்தைப் பெற்றான். பலி பீடத்தை நாம் நிரப்பும் போது தாமதமில்லாமல் பதிலளிப்பவர் நம் தேவன்.

போலிகள் அகற்றப்பட்ட பின்புதான் அக்கினி இறங்கியது :

1 ராஜா.18:34-35 வசனங்களில் சர்வாங்க தகனபலியின் மேலும், விறகுகளின் மேலும் நாலுகுடம் தண்ணீர் வீதம் மூன்று முறை ஊற்றும் படி செய்தான். அப்போது தண்ணீர் பலிபீடத்தைச் சுற்றிலும் ஓடினது என்றும் வாய்க்கால்களையும் தண்ணீரால் நிரப்பினான் என்றும் படிக்கிறோம். இதன் பொருள் என்ன? தவறான அக்கினிக்கு இடமே அளிக்கப்படவில்லை. அடியிலே நெருப்புப் போட வேண்டாம் என்று பாகாலின் தீர்க்கர்களோடு சவால் விடும் போது கூறியிருக்கிறான். இரகசியமான தந்திரங்கள் பயன்படுத்தக்கூடாது, பொய்மை நுழைந்துவிடக்கூடாது என்பதில் எலியா ஜாக்கிரதையாயிருந்தான். பரலோக அக்கினி மட்டுமே அவனது ஏக்கமாயிருந்தது.

பின்பு ஜனங்களை அவன் அருகில் வரும்படி அழைத்தான். அவர்கள் எல்லாவற்றையும் பரிசோதித்துப் பார்ப்பதில் அவனுக்கு எந்தத் தடையும் இல்லாதிருந்தது. ஊற்றப்பட்ட தண்ணீரால் தீப்பொறிகள் இருந்தால் கூட தணிக்கப்பட்டிருக்கும். அவனது விசுவாசம் இயலாமைகளைக் கண்டு நகைக்கக்கூடியது. அந்த விசுவாசம் மிகப் பெரியது. தேவன் ஒருவரே அக்கினியை இறங்கப் பண்ண வேண்டுமே ஒழியப் பதிலாக எதுவும் இடையில் வருவதை அவன் விரும்பவில்லை.

விசுவாச ஜெபத்தை ஏறெடுத்த பின்புதான் அக்கினி இறங்கியது :

"..... கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், ... உம்முடைய வார்த்தையின்படி செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும். கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும் என்றான்" 18:36-37.

வெகுண்டெழுந்த பாகாலின் தீர்க்கர்களின் பைத்தியக் குரலுக்கு இது

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

எத்தனை வேறுபாடானது! அவர்கள் பலிபீடத்தின்மேல் குதித்து, பதிலளிக்கக் கூடாத பாகாலுக்காக இரத்தம் வடியு மட்டும் கத்திகளாலும், ஈட்டிகளாலும் தங்களைக் கீறிக் கொண்டார்கள். எந்த பயனுமில்லை. பரலோகம் இதனை உற்று நோக்கிக் கொண்டிருந்தது. யெகோவா ஒருவரே பதிலளிக்க முடியும் என்று நம்பிக்கை கொண்ட எலியா பாகாலின் தீர்க்கர்களைப் பரிகாசம் செய்கிறான். தேவன் தமது ஊழியக் காரனை கைவிடக்கூடாது என்பதும், தேவநாமம் மட்டுமே மகிமைப்பட வேண்டும் என்பதும் அவனது வாஞ்சை. தேவனுடைய பார்வையில் அது பிரிய மாயிருந்தது. "எலியாவின் இந்த சோதனை துஷ்டனான ஒரு அரக்கனுக்கு முன்பாகவும், பின்வாங்கிப் போன ஒரு தேசத்திற்கு முன்பாகவும், விக்கிரக ஆராதனை செய்யும் பூஜாரிகளுக்கு முன்பாகவும் கர்மேல் பர்வதத்தில் ஏறெடுக்கப்பட்ட ஒரு விசுவாசம் நிறைந்த ஜெபத்திற்குக் கிடைத்த ஆச்சரியமான பதிலின் வெளிப்பாடு" என்று E.M. Bounds குறிப்பிடுகிறார்.

எலியா இந்த ஜெபத்தை ஏறெடுத்ததும் பரலோக அக்கினி இறங்கி வந்தது. அது கிரமம் கிரமமாக வரவில்லை. ஒரேயடியாக பலிப்பொருள், விறகு, கற்கள், தண்ணீர் எல்லாமே அக்கினிக்கு எதிராக செயல்பட முடியாமல் போய் விட்டன. எலியாவின் இருதய வாஞ்சை நிறைவேறியது. யெகோவா தான் மெய்யான தேவன் என்பது நிலை நிறுத்தப்பட்டது. ஜனங்கள் மத்தியில் உண்மையான தேவபிரசன்னமும், வல்லமையும் மறுபடியும் உறுதிப் படுத்தப்பட்டன. தேவனுடைய ஊழியக் காரன் தன் கனத்தை இழந்து போக வில்லை. பாகாலை வணங்குகிறவர் களின் முகமூடி கிழிக்கப்பட்டது. யோவா 14:13-ல் குறிக்கப்பட்டது போல நமது ஜெபங்கள், "குமாரனில் பிதா மகிமைப் பட வேண்டும்"என்று நோக்கங் கொண் டிருந்தால் அக்கினி இறங்குவது நிச்சயம்.

அக்கினி இறங்கியதால் பெறப்பட்ட நன்மைகள்

இஸ்ரவேல் அனைத்தும் முகங் குப்புற விழுந்தது. தேவ ஊழியக்காரனு டைய சாட்சி பட்சிக்கிற அக்கினியா யிருக்கிற தேவனால் உறுதிப்படுத்தப் பட்டது. "ஜனங்களெல்லாரும் இதை கண்டபோது முகங்குப்புற விழுந்து, கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள்" 18:39. கண்களால் பார்த்த பின் மறுதலிக்க முடியுமா? நம் மத்தியிலும் அக்கினி இறங்கும்போது தேவனற்ற சமுதாயம் நமது சாட்சியை ஏற்றுக்கொள்ளும்.

நடைபெறக்கூடாதென்று எண்ணப்பட்டவை நடைபெற்றுவிட்டன

கற்கள் அக்கினியால் பட்சிக்கப் படுவதைக் கேட்டிருக்கிறோமா? ஆனால் எலியாவின் ஜெபத்தில் அக்கினி இறங்கிய போது அது நடைபெற்றது. பெந்தெகோஸ்தின் அனுபவமும் இத்த கையதுதான். அப்போஸ்தலர்களின் வாழ்வில் தலைகீழான மாற்றம். அவர்களது கோழைத்தனம் மாறி தைரியம் வந்தது, சந்தேகம் அகன்று விசுவாசம் பலப்பட்டது; சுயத்தேடல் மாறி பிறர் நலன் அவர்கள் உள்ளத்தை நிரப்பியது. தேவ நாமம் ஒன்றே மகிமைப்பட வேண்டும் என்ற வாஞ்சை மேலோங்கியது. நற்பண்புகள் தோன்றி செழித்து வளர்ந்தன.

ஒரு விசுவாசியில் அக்கினி இறங்கினால் 10 வருடங்களாக சாதிக்க முடியாதவைகளை, அவன் 10 நிமிடங் களில் சாதிக்கக் கூடும். அக்கினியால் நிரப்பப்பட்டவர்களின் வாழ்வு தூய ஆவியானவரால் நடத்தப்படுவதால் அது தேவசித்தத்தின் பாதையிலேயே செல்லும்.

பரத்திலிருந்து வந்தவரே,
தெய்வீகப் பரிசுத்த அக்கினியை அளித்தவரே,
பரிசுத்த அன்பின் ஜ்வாலையைத் தூண்டி எழுப்பும்
எனது இதயமாகிய பெரிய பலிபீடத்தில்
உமது மகிமைக்காக அக்கினி எரியட்டும்
அணைக்க முடியாத பெரு நெருப்பாய்
அது தன் பாதையில் திரும்பும் போது
இருதயம் தாழ்மையுடனும் ஜெபத்துடனும்
ஊக்கமான துதியுடனுமிருக்கட்டும்.

இன்னும் அதிகமாக கண்ணீர் விடுவது யார்?

Who weeps any more?

Leonard Ravenhill (1907-1994)

இந்நாட்களில் சபை, புதிய ஏற்பாட்டு சபைகளிலிருந்து பல ஆயிரம் மைல் தொலைவிற்கு விலகிவிட்டது.

சபைகளில் குறைவுபடுவ தென்ன? வேதபுத்தக மொழியில் கூறுவ தானால் அது 'கர்த்தருடைய பாரம்' என்று கூறலாம். தேசத்தில் தீர்க்கதரிசன சத்தம் கேட்கப்படாமலிருப்பது மிக ஆபத்தானது. **அழிந்து போகிற மக்களுக் காகப் புலம்புவது யார்?** எரேமியா தன் காலத்தில் மக்களுக்காகவும் அவர் களுடைய பாவங்களுக்காகவும் மிகவும் பாரங்கொண்டவனாயிருந்தான். எனவே அவர்களுக்காக இரவும் பகலும் புலம்பி அழுகிறவனாயிருந்தான்.

பழைய ஏற்பாட்டு காலத்தின் கடைசி எழுப்புதல் யோவேலின் புஸ்த கத்தில் கூறப்பட்டுள்ளது. யோவேல் தீர்க்கர் ஒரு பரிசுத்தமான கூடுகைக்காக மக்களுக்கு அழைப்பு விடுக்கிறார் : 'கர்த்தரின் பணிவிடைக்காரராகிய ஆசாரி யர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக் கும் நடுவே அழட்டும்' ..... யோவே.2:17.

சபையில் எழுப்புதல் தேவை. இந்த பாரம் பீடத்தில்தான் காணப்பட வேண்டும். நித்தியத்தைப் பற்றிப் பிரசங்கிக்கும் உணர்வுள்ள பிரசங்கிகள் நமக்குத் தேவை. அவர்கள் மக்களின் பாவ பாரத்தோடும், நொறுங்கிய உள்ளத்தோடும், தலைகுனிந்தவர் களாகப் பீடத்தில் வருவார்கள். இன்று பீடத்தில் நிற்பவர்கள் கூறுவதென்ன? ஐந்து நிமிடங்கள் முழங்காலில் நில்லுங்கள், உங்கள் பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படும். மிகப்பெரிய மாளிகையைப் பெறுவீர்கள்; அழகிய கிரீடம் தரிப்பிக்கப்படுவீர்கள். ஆட்டுக் குட்டியானவரின் திருமண விருந்திற் கான இலவச சீட்டும் கிடைக்கும்.

தேவனற்ற சமுதாயம் நம்மைச் சூழ்ந்து காணப்படுகிறது. இவர்களுக்குத் தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் கூறு வது யார்? தங்கள் இரத்த நாளங்களில் சுவிசேஷம் கொதித்துக் கொண்டிருக்கும் சபைத் தலைவர்கள் எங்கே? அனேக பிரசங்கங்கள் மக்களை மத சம்பந்தமான உணர்ச்சிகளைத் தூண்டுவதேயல்லாமல் மக்களை மனந்திரும்புதலுக்கேதுவான கண்ணீருக்கு நேராக வழிநடத்துவ தில்லை.

உண்மையான தீர்க்கதரிசி தேசத்தைப் பற்றியும் சபையைப் பற்றியும் கவலைகொள்வதை விட தேவன் பகிரங்கமாக நிந்திக்கப்படுவதும், அவரது நியமங்கள் மீறப்படுவதும், தேவகுமாரன் புறக்கணிக்கப்படுவதும், சுவிசேஷம் ஊடுருவிய தேசத்தில் காணப்படுவதைக் குறித்து பாரமடை வான். பாவம் பால்போல் பருகப்பட்டு, இயேசுவின் நாமம் வீணாக பயன் படுத்தப்படுகிறது. சுவிசேஷ செய்தி களுக்குக் குறையில்லையே.

சோதோம் பட்டணத்திற்கு பிரசங்கிகள் இருக்கவில்லை, சுவிசேஷ செய்திகள் அங்கு ஒலிபரப்பப்பட வில்லை. இன்றோ எத்தனையோ ஊடகங்கள் மூலமாக சுவிசேஷத்தைக் கேட்க முடிகிறது. ஆனால் நமது கலாச்சாரம் அழிவின் விளிம்பிற்கு வந்து விட்டது. நியாயத்தீர்ப்பைக் குறித்த எச்சரிப்பைக் கொடுப்பது யார்?

அலெக்சாண்டர் மேக்லேரன் இங்கிலாந்திலுள்ள மிகப் பெரிய பாப்திஸ்து சபையில் போதகராகப் பணியாற்ற அழைப்புப் பெற்றார். அவர் அச்சபையின் மூப்பரோடு ஒன்றி பேசி முடிக்க விரும்பினார் : "உங்களுக்கு என் தலை வேண்டுமா அல்லது கால்கள் வேண்டுமா" என்பதுதான் பேசிமுடிக்க வேண்டிய விஷயம். கால்களைத் தெரிந்து கொண்டால் உங்களோடு சேர்ந்து ஓடியாடி உழைக்கலாம். ஆனால் இந்த பட்டணத்தை ஆண்டவருக்காக ஆதாயம் செய்ய முடியாது. தேவன் அவருக்கு முன்பாகத் தாழ்த்தி ஜெபிக்கிற தலைகளைக் கொடுக்கிற ஊழியர் களையே விரும்புகிறார்.

ஊழியர்கள் கூடுகைகளில் நான் பேசும்போது, வேதத்தின் அடிப்படை யில் நீங்கள் செய்ய வேண்டியது, "ஜெபம் பண்ணுகிறதிலும் வேத வசனத்

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

தைப் போதிப்பதிலும் இடைவிடாமல் தரித்திருப்பது" என்று அப்.6-ல் கூறியிருப் பதைச் சுட்டிக் காண்பிப்பேன். தெசலோ னிக்கே சபைக்கு நிருபம் எழுதும்போது, தாம் இரவும் பகலும் ஜெபித்ததாகக் கூறுகிறார். அவர் எதற்காக ஜெபித்தார்? உலகத்திற்காகவோ, ரோம சாம்ராஜ்யத் திற்காகவோ அல்ல, "உங்கள் முகத்தைக் கண்டு, உங்கள் விசுவாசத்தின் குறைவு களை நிறை வாக்கும் பொருட்டு, இரவும் பகலும் மிகவும் வேண்டிக் கொள்ளுகி றேன்" தெச.3:10. தெசலோனிக்கேயரிடம் விசுவாசம் இருந்தது. ஆனாலும் அதில் குறைவு இருந்தது. குறைவுபட்டவைகள் நிறைவாகும்படி ஜெபிப்பதுதான் ஊழியக்காரனின் கடமை.

பழைய ஏற்பாட்டில் தேவனு டைய பாரம் அமலேக்கியா, பெரிசியா, எபூசியா போன்றவர்கள் மீதல்ல இஸ்ரவேல் மக்கள் மேலிருந்ததாகப் பார்க்கிறோம். புதிய ஏற்பாட்டின் நிருபங்கள் இழந்து போனவர்களுக்கு எழுதப்படாமல் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். Dr.ஆற்டன் வைலி என்பவர் எபிரெ யருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் இழந்துபோன மக்களுக்காக ஒரு வார்த்தைகூட எழுதப்படவில்லை என்கிறார். ஏனெனில் எழுப்புதலடைந் ததும் விசுவாசம் நிறைந்ததுமான ஒரு சபை மட்டுமே இழந்து போனவர்களை தேவனிடம் கொண்டு வர முடியும்.

சபையின் பலவீனத்திற்கு இரு காரணங்கள் இருக்கலாம். முதலாவது சாட்சியாயிருக்கவும், உழைக்கவும் கற்றுக் கொடுத்திருக்கிறோம். ஆனால் தேவனை ஆராதிக்கக் கற்றுக்கொடுக்கவில்லை. தேவனுக்கு முன்பாகக் கிறிஸ்தவர்கள் அவருடைய மகிமை மகத்துவம் ஆகிய வற்றை எடுத்துச்சொல்ல சமயம் எடுப்ப தில்லை. காட்டிலே சென்று வேட்டை யாடுவதற்காகச் செல்லுபவர்கள் தங்களை 3 நாட்கள் ஆயத்தப்படுத்து கிறார்கள். ஆனால் ஆத்துமாக்களைப் பிடிக்க வேண்டிய ஊழிக்காரர் உபவாசித்து ஜெபித்து ஆயத்தப்பட வேண்டாமா? ஆலய ஆராதனை சற்று நீண்டுவிட்டால் முறுமுறுக்கிற சபை மூப்பர்கள் TV முன்னால் எவ்வளவு நேரத்தைச் செலவு பண்ணுகிறார்கள்? அவர்கள் நித்தியத்தை எப்படிச் கழிப்பார்கள்?

இரண்டாவதாக ஜெபக்கூடுகை கள் பலனற்றவைகளாகிவிட்டன அல்லது நின்றுவிட்டன. பிரசித்தி பெற்ற சபை களில் இடைவாரக் கூடுகைகள் வேத பாட வகுப்புகளாகவே காணப்படு கின்றன. இறுதியில் மட்டும் ஓரிரு ஜெபங்கள் ஏறெடுக்கப்படுகின்றன. கலா.4:19-ல் பவுல், "கிறிஸ்து உங்களில் உருவாகுமளவும் உங்களுக்காக மறு படியும் கர்ப்ப வேதனை படுகிறேன்" என்கிறார். இந்த அனுபவமற்றவர்கள் பீடத்தில் நின்றுகொண்டு ஜனங்களிடம், 'நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்' என்று கூறுவது எப்படி?

அப்போஸ்தலர் 4-ம் அதிகாரத் தில் கூறப்படும் ஒரு சபையைப் பார்ப்போம். ஜனங்கள் ஒவ்வொரு நாளும் ஆலயம் சென்றனர், தினந் தோறும் ஜெபித்தனர், அனுதினமும் அப்பம் பிட்டனர். ஒவ்வொரு நாளும் ஆத்தும ஆதாயம் செய்தனர். சபை மூப்பர் பிரித்தெடுக்கப்பட்டு சோதிக்கப் பட்டனர். அவர்களில் விசுவாசமும் தூய ஆவியானவரின் நிறைவும் காணப் பட்டது.

இன்று ஆண்டவருடைய பாரம் என்ன? பாவிகளும், முரட்டாட்ட முள்ளவர்களும் தேவனுக்கு எதிர்த்து நிற்கிறவர்களும் மனந்திரும்ப வேண்டும். பிரசங்கிக்கிறவர்கள் அவருடைய நியாயத் தீர்ப்பைப் பிரசங்கிக்க வேண்டும். அவரது மணவாட்டி சபையைக் குறித்த பாரம் வேண்டும். இது கடைசிக் காலம்.

வெவ்வேறு நாடுகளில் வாழும் ஊழியர்கள் அனைவரும் இணைந்து ஒரு வாரம் எழுப்புதலுக்காக ஜெபித்தால் நன்று. சபை வாழ்வில் இது எழுச்சியைத் தரும். இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக ஒரு பெந்தெகொஸ்தே அனுப வம் பெறப்பட வேண்டும். மாம்சமான யாவர்மேலும் ஆவியை ஊற்றுகிறதற் காகக் காத்திருக்க வேண்டும். அனேக தலைவர்கள் நமது கண்களுக்கு மறைவா யிருக்கலாம். ஆனால் அந்த பெரிய நாளில் தேவன் அவர்களை வெளிச்சத் துக்குக் கொண்டு வருவார். கடைசியான வர்கள் அன்று முதலிருப்பார்கள். அந்நாள் விரைவில் வரக் காத்திருப்போம்.

பரிசுத்தப்படுத்துகிறவரண்டை கிட்டிச் சேருவோம்

Draw near to the one who sanctifies

Rich Carmicheal

"பரிசுத்தமில்லாமல் ஒருவரும் தேவனை தரிசிக்க முடியாது" எபி.12:14. 'நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் ..... கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார்" எபே.1:4. "தேவன் நம்மை அசுத்தத்திற்கு அல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்" 1 தெச.4:7. "நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்த ராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" 1 பேதுரு 1:16. நாம் பரிசுத்தமாக வாழ்வது அவரது சித்தம். நாம் அவ்வாறு வாழும்போது அவர் சந்தோஷப்படுகி றார் 1 தெச.4:1-3. பரிசுத்த வாழ்வின் மூலம் நாம் அவரை கனப்படுத்துகிறோம் 2 கொரி.7:1. நாம் அவருக்கு மகிமையை கொண்டு வருகிறோம். 2 தெச.1:10. நாம் அவரது மகிமையில் பங்காளிகளாகி றோம் 2 தெச.2:13-14. பரிசுத்த வாழ்வுக்கு நேராக அழைக்கப்படும்போது நாம் அதை மறுத்தால் அது தேவனை மறுப்ப தற்கு இணையாகும் 1 தெச.4:8.

தூய வாழ்வைக் குறித்த இரு சத்தியங்களைக் குறிப்பிடுகிறேன். முத லாவது பரிசுத்த வாழ்வு கர்த்தருடைய பணி. நாம் புனிதப்படுத்தும் அவரு டைய ஆவியால் பரிசுத்த வாழ்வை பெறுகிறோம் (2 தெச.2:13) இயேசுவின் இரத்தத்தின் மூலமாகவும் (எபி.9:13-14) அவருடைய வார்த்தையின் சத்தியத்தின் மூலமாகவும் (யோவா 17:17) அவருடைய திட்டம் கிருபை ஆகியவற்றின் மூலமாக வும் (2 தீமோ.1:9) நாம் தூய வாழ்வைப் பெறுகிறோம். அவர் நம்மை பரிசுத்த மாக்குகிறவர் (எபி.2:11; 13:12) உண்மை யில் இயேசுவே நமது ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார் (1 கொரி.1:30).

இரண்டாவதாக அது முதல் சத்தியத்துடன் மிக நெருக்கமானது. தூய வாழ்வு ஆண்டவரோடுள்ள நமது உறவில் எப்போதும் வேரூன்றியுள்ளது. பரிசுத்தத் தின் வெளித்தோற்றத்தை மட்டும் விரும்பினால் அது மாய்மாலம். அதில் வல்லமையில்லை.

எனவே நமது ஆண்டவரோ டுள்ள நமது உறவை நாம் ஆழப்படுத்த வேண்டும். நாம் அவரை நெருங்கிச் சேரும்போதும் நமது வாழ்வை அவருக்கு அர்ப்பணிக்கும் போதும் அவரது பரிசுத்தத்திற்குப் பங்காளிகளாகிறோம் எபி.12:9-10. அவருக்கு நேராக நமது அன்பிலும், பயபக்தியிலும் நாம் வளரும் போது நாம் பாவத்தையும், அவரிட மிருந்து நம்மைப் பிரிப்பதற்கு ஏதுவான எதையும் தவிர்ப்போம். 2 கொரி.7:1-ன் படி : மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மை சுத்திகரித்துக் கொண்டு பரிசுத்தமாகு தலை தேவ பயத்தோடே பூரணப் படுத்தக்கடவோம். "உங்களை அழைத் தவர் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லா வற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்" 1 பேதுரு 1:15. "..... கறையற்றவர்களும், பிழையற்றவர்களுமாய் சமாதானத் தோடே அவர் சந்நிதியில் காணப்படும் படி ஜாக்கிரதையாயிருங்கள்" 2பேதுரு.3:14.

நீங்கள் "பரிசுத்தத்தில் மகத்து வமுள்ள" யாத்.15:11 ஆண்டவரோடு நெருங்கிச் சேரும் போதும், எபி7:26-ல் கூறப்பட்ட படி "பரிசுத்தரும், குற்றமற்ற வரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்த வருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார். நாம் அவரைக் கிட்டிச் சேரும்போது அவர் நம்மைக் கிட்டிச் சேருவார் யாக்.4:8. அவருக்குப் பிரியமானதை நம்மில் நடப் பிப்பார் எபி.13:21.

"சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கு வாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து வரும் போது குற்ற மற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" 1 தெச.5:23.

தேவனை அறியாத மக்களுக்காக நீ கதறி ஜெபிப்பது நல்லதுதான், ஆனால் தேவபயம் உன்னில் இருந்தால் மட்டுமே அவர் உனக்குப் புகலிடமாயிருப்பார்.

(2-ம் பக்க தொடர்ச்சி)

சரியான நேரத்தில் மிகவும் ஆரம்ப நிலையில் கிருமி தொற்று இருப்பதால் வீட்டில் வைத்து கவனிக்காமல் ஆஸ்பத்திரியில் சேர்க்கச் சொல்லி விட்டனர். உடனடியாக சிகிச்சை தொடங்கினர். ஆஸ்பத்திரியில் நாங்கள் இருக்கும்போது உதவிக்கு யாரையும் அனுமதிக்கவில்லை. தனி அறையில் நானும் என் இயேசுவும் மட்டுமே இருந்தோம்.

பிராண வாயு (ஆக்ஸிஜன்) மூக்கு வழியாக செலுத்தப்பட்டது. ஆன்டி பயாடிக் வைரஸ் கிருமியை கொல்லும் மருந்தொன்றுமாக மருந்துகள் மளமள வென்று நரம்பு வழியாக ஏற்றப்பட்டது. ஒவ்வொரு மணி நேரத்தையும் ஒவ் வொரு நாளையும் கடத்துவது பெரும் பாடாகிவிட்டது. இதில் பயங்கரம் என்னவென்றால் முதல் 5 நாட்கள் என்னால் ஜெபம் செய்ய முடியவில்லை. பைபிள் வாசிக்க மனமுமில்லை. அந்த கொடுமையான நேரங்களில் இயேசுவே! இயேசுவே! என்று மட்டும் கூற முடிந்தது. கவிழ்ந்தே படுத்திருந்தேன்.

வேளா வேளைக்கு நல்ல உயர்தர சாப்பாடு கொடுக்கப்பட்டது. ஆனால் சாப்பிட மனமில்லை. மாத்திரை சாப்பிட கொஞ்சமாவது உணவு சாப்பிட்டு வயிற்றை நிறைக்க வேண்டும் என்பதற் காக கொஞ்சம் சாப்பிட்டேன். பேரீச்சை பழ கொட்டை போல 10 விதமான மாத்திரைகளை 3 நேரம் விழுங்கினேன். எப்படியோ உங்கள் அனைவருடைய ஜெபங்கள், ஜெப குழுக்களாக T.V, YouTube வழியாக எனக்காக ஜெபித்த அத்தனை பேருக்கும் நன்றி கூறுகிறேன்.

கர்த்தரின் பெரும் கிருபையால் கொரோனா வியாதியிலிருந்து சுகம் பெற்று 2020 அக்டோபர் 8-ம் தேதி வீடு வந்து சேர்ந்தேன். அக்டோபர் மாதம் 9-ம் தேதி என் திருமண நாள். திருமண நாளில் வெகு தூரத்தில் என் மனைவி நிற்க, நான் என் படுக்கை அறையி லிருந்துகொண்டே கைபேசி வழியாக ஜெபித்து நாங்கள் இருவரும் கர்த்தரை துதித்தோம். கொரோனா சூழ்நிலையில் யாரும் யாரையும் பக்கமாகக்கூட நின்று பேச முடியாத நிலை மிக மிக மோசமான தாகும். எங்கள் வாழ்க்கையில் கேட்டி ராத, வேத புத்தக சரித்திரத்தில் மட்டு மல்ல உலக சரித்திரத்தில் கூட கேட்டிராத மிக மோசமான நிலை இது என்பது உண்மை.

Dr. M.G.E.P., Salem

* * * * *

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரிய மானவர்களே, 1969-ம் ஆண்டு முதல் அடியேன் தூதனை அச்சிட்டு (Printing) வருகிறேன். தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி 1991-ம் ஆண்டு முதல் தூதன் பத்திரிகை பணியில் துணை ஆசிரியராக (Associate) பணி ஆற்றி வந்த போது **தேவன் கிருபையாய் என்னை ஏவினபடியால்** ஊழியத்திற்கான கட்ட டங்களை கட்டினேன்.

ஒரு விசை இந்த ஊழியத்தில் ஒரு சின்ன பிரச்சனை ஏற்பட்ட போது, என்னை சந்திக்க வந்த எனது உறவின ரான ஓர் வழக்கறிஞர் என்னைப் பார்த்து, 'அண்ணே, **இந்த கட்டடங்கள் உங்கள் கண்ணீர், உங்கள் இரத்தம், உங்கள் வேர்வை**' என்றார். இதை இப்பொழுது இங்கே விவரிக்க விரும்பவில்லை.

அதே போல வருடத்திற்கு ஒரு முறை நாம் நடத்தும் உபவாச ஜெபத்தை சிவகாசி ஷெக்கைனா A.G. சபையில் நடத்தின பிற்பாடு, இந்த உபவாச ஜெபத்தை மாதந்தோறும் நடத்த கர்த்தர் சொன்னார். எனவே சில வருடங்களாக மாதந்தோறும் உபவாச ஜெபங்கள் நடத்தி வருவதை வாசகராகிய நீங்கள் அறிவீர்கள். இந்த உபவாச ஜெபம் சபைகளில் வழக்கமாக நடப்பது போன்றது அல்ல என்பதை அநேக சபை ஊழியர்கள் அறியவில்லை. இது தேசத் திற்காக, எழுப்புதலுக்காக இதய கதறல் அல்லது வேதனையோடு வேண்டிக் கொள்வது ஆகும்.

உதாரணமாக, தஞ்சாவூரில் உபவாச ஜெபம் நடத்த போயிருந்த போது, நாங்கள் தங்குவதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பெரிய விடுதிக்கு (Lodge) உரிமையாளராகிய சகோதரி, உபவாச கூட்டம் முடிந்த பிற்பாடு என்னைப் பார்த்து **"ஜெபிக்க ஆசை யாயிருக்கிறது"** என்றார்கள். இவரும், இவருடைய கணவனும் இந்து மார்க்கத் திலிருந்து இரட்சிக்கப்பட்டு, பொருளா தாரத்தில் உயர்ந்து இருந்தாலும், சபை ஊழியங்களில் புருஷனும் மனைவியும் ஈடுபடுகிறார்கள் என்பது சிறப்பு அம்சம் ஆகும்.

இது போல மதுரை உபவாச ஜெபத்தில் மிகுந்த ஆத்தும பாரத் தோடும் கண்ணீரோடும் அடியேன் பிரசங்கிக்க ஆவியானவர் பயன்படுத் தினதை கூட்டம் முடிந்த பிற்பாடு எனக்கு அறிமுகமான தேவனுடைய பிள்ளைகள் என்னிடம் பகிர்ந்து கொண்டார்கள்.

அது போல கர்நாடகா மாநிலம் மைசூர் கூட்டங்களும் அற்புதமாக இருந்தது. காரணம், ஆவியானவரின் அசாதாரணமான அசைவாடுதலே!

அந்தமான் கூட்டங்களின் முடிவில் சில வாலிப தங்கைகள் ஆங்கிலத்தில் "அங்கிள் நீங்கள் இங்கே வந்ததற்காக மிகவும் நன்றி" என்று கூறி னார்கள். நான் அவர்களுக்கு மாறுத் தரமாக, 'ஆண்டவர் என்னை இங்கே கொண்டு வந்தார்' என்று கூறினேன்.

இவ்விதமான ஊழியங்களை தாங்கவோ, ஊழியங்களின் தேவைகளை சந்திக்கவோ விருப்பமில்லாத வாசகர் களும் இருக்கிறார்கள். அவர்கள் இந்த நல்ல பத்திரிகையை மாத்திரம் குறைந்த செலவில் வாசிக்க விரும்புகிறார்கள். இரவு பகலாய் பிரயாசப்படுகிற, உழைக்கிற ஊழியக்காரர்களையும் நினைப்பதில்லை.

மாதந்தோறும் வருகையின் தூதன் ஊழியத்தை தாங்குங்கள் என்று எழுதினால், வருடத்திற்கு ஒரு முறை 'சந்தா' ரூபாய் 50, 100, 150, 200 என்று அனுப்புகிறார்கள். இதில் சோகம் என்ன வென்றால் இவர்கள் சந்தா அனுப்பும் போது கூடவே எழுதும் கடிதமும் உண்மை கிடையாது. இந்த ஊழியத்தை செய்கிறவர்கள் மேல் அவர்களுக்கு எந்தவித அக்கரையும் கிடையாது. இதற்காக சுமார் 5 ஆண்டுகள் ஆண்டவர் சமூகத்தில் முறையிட்டேன். அதன் விளைவுதான் இந்த ஆசிரியர் கடிதத்தின் பின் பகுதியில் எழுதப்பட்ட அறிவிப்பு கள்!

வாசகர் கடிதங்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோ தரர் அவர்களுக்கு, தங்களது வருகையின் துதன் வருட சந்தா ரு.50 EMO அனுப்பி யுள்ளேன்.

EMO No. : .....

V.R.S., Thoothukudi

* * * * *

23.11.2020

Dear Brother / Sister,

Greetings in Jesus Name. Herewith we have enclosed a crossed cheque for Rs. 300/- towards the work of Lord's through your organisation.

Every day we pray for the ministry, May God bless all your efforts for His Glory.

With regards & Prayers

Yours in Him

S.V.I., Thiruninravur R.S

* * * * *

CN 029025

அன்பார்ந்த ஆசிரியருக்கு நான் ரூ.500/- காசோலை அனுப்பி வைத்துள் ளேன். இந்த காணிக்கையை பெற்றுக் கொள்ளுங்கள்.

இப்படிக்கு

C.B.R.J., சென்னை

* * * * *

சாட்சியாபுரம்

28.10.2020

கர்த்தருக்குள் பிரியமுள்ள ஐயா அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தங்களுடைய ஊழியத்திற்கு ரூ.500/- காணிக்கை அனுப்பியுள்ளேன், பெற்றுக்கொள்ளவும். குடும்பத்தில் பல கஷ்டங்கள் இருக்கிறது. கடந்த 6 மாதங்களாக 2 வீடுகள் வாடகைக்கு போகவில்லை. ஆட்கள் வீடு பார்க் கிறார்கள், எல்லாம் பேசிவிட்டு நான் முன்பணம் கொடுக்கிறேன் என்று கூறிவிட்டு போய்விடுகிறார்கள். குடும்பத்தின் செலவுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மகன் பி.காம் மூன்றாம் ஆண்டு படித்துக் கொண்டு இருக்கிறான். கஷ்டமான சூழ்நிலை யிலும் தேவன் எங்களை ஆச்சரியமாக நடத்தி வருகிறார். 6-வது மாதம் பணம் அனுப்பிவிட்டு ஜெபிக்கும்படி கடிதம்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

எழுதியிருந்தேன். வீடு வாடகைக்கு போகவும் மகன்-க்கு காலேஜ் சீக்கிரம் திறக்கப்பட்டு நல்லபடியாக 3-ம் ஆண்டு முடிக்கவும், குடும்பத்தின் தேவைகளை தேவன் சந்திக்கும்படி தயவுசெய்து எங்களுக்காக ஜெபிக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

G.T.,

அறிவிப்புகள்

கர்த்தருக்கு சித்தமானால் 01.01.2021 முதல் புதிய முகவரி பட்டியல் தயாரிக்கிறோம். அதில் யார் யார் இடம் பெறுவார்கள் என்பதை முதலாவதாகவே தெரிவிக்கிறேன்.

1. மாதந்தோறும் வருகையின் தூதன் ஊழியத்தை தாங்குகிறவர்கள்.
2. வருடத்திற்கு ஒரு முறை குறைந்த பட்சம் ரூபாய் 500 காணிக்கை அனுப்புகிறவர்கள்.
3. வருடத்திற்கு ஒரு முறையாவது உற்சாக காணிக்கை உதாரத்துவமாய் அனுப்புகிறவர்கள்.

நம்மில் யாருமே சாறிபாத் ஊரில் உள்ள விதவையை போன்ற நிலைமையில் இல்லை என்று விசுவாசிக்கிறேன். கர்த்தர், நீ எழுந்து, சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போய், அங்கே தங்கியிரு; உன்னைப் பராமரிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன் என்றார்.

அங்கே ஒரு விதவை விறகு பொறுக்கிக் கொண்டிருந்தாள்; ..... அவன் அவளை நோக்கி கூப்பிட்டு, கொஞ்சம் அப்பமும் உன் கையிலே எனக்குக் கொண்டு வா என்றான்.

அதற்கு அவள் : ..... இதோ, நானும் என் குமாரனும் **சாப்பிட்டுச் செத்துப் போக,** அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துவதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள்.

அப்பொழுது எலியா அவளைப் பார்த்து : பயப்படாதே; ..... ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டு வா; ..... என்றான் *1 இராஜா.17:8-16.*

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும் *மத்தேயு 6:33.*

அன்றியும் சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்கு தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்.

அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், **கொழுய தரித்திரமுடையவர்களாயிருந்தும்,** தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்.

மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன் *2 கொரி.8:1,2,3.*

1. மணியாடர் அனுப்பும் போது தகவலுக்கான பகுதியில் (Message) உங்கள் பெயர், பதிவு எண், தொலை பேசி எண் கட்டாயம் எழுதுங்கள்.

உதாரணமாக,

Message:

N. செல்வராஜ்,
பதிவு எண் : NC 104
மொபைல் : 94 .....

அதுபோல

Postman to detach here

.....

அனுப்புனர் : N. செல்வராஜ், NC 104
மொபைல் : 94 .....

என்று சுருக்கமாக எழுதுங்கள். நன்றி.

2. வங்கி வழியாக அனுப்பும் போது,

பெயர் : .....
பதிவு எண் : .....
மொபைல் : .....

எதற்காக என்று தெரிவியுங்கள்.

3. காசோலை அனுப்பும் போது,

பதிவு எண் : .....
மொபைல் : .....

எதற்காக அனுப்பப்படுகிறது என்று எழுதுங்கள்.

தேவ கிருபையால் கடந்த 2020-ம் ஆண்டை "தேவனோடு சஞ்சரிக்கும் ஆண்டு" **"Year of walking with God"** என்று அறிவித்தோம்.

"2021" ஆண்டவரோடு நேரம் செலவிடும் ஆண்டு; "2021" Year of spending time with the LORD என்று ஜெபத்தோடு அறிவிக்கிறோம்.

இதைக் குறித்து அநேக நாட்களாக தியானித்துக் கொண்டிருக்கும் போது, ஒரு இணைய தள ஆராதனையில் பிரசங்கித்த அருமையான போதகர், PRAYER is spending time with the LORD என்று பிரசங்கித்ததைக் கேட்டேன். அது 100 சதவீதம் உண்மைதான் ஆனாலும் அடியேன் அதைவிட அதிக ஆழமாக எழுத வாஞ்சிக்கிறேன். அதற்கு ஆதாரமாக "வேதாகம புதிர்" போல இம்மாதம் ஒரு வசனத்தை மாத்திரம் எழுதுகிறேன்.

"எருசலேமின் குமாரத்திகளே : எனக்குப் பிரியமானவளுக்கு மனதாகுமட்டும் நீங்கள் அவளை விழிக்கப் பண்ணாமலும் எழுப்பாமலுமிருக்கும்படி, வெளிமான்கள் மேலும் வெளியின் மறைகள் மேலும் உங்களை ஆணையிடுகிறேன்" உன்னதப்பாட்டு 3:5.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உதவி : 94897 40295
அலுவலகம் : 95432 21008
சமயம் : 10-01;02-06

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

ஆசிரியர் குறிப்பு :

2020-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் வரை, வருகையின் தூதன் ஊழியங்களை மாதந்தோறும் தாங்கினவர்களுக்கும், உதாரத்துவமாய் உற்சாக காணிக்கை அனுப்பின வர்களுக்கும் ஒரு கிப்ட் கொரியர் வழியாக அனுப்பியிருக்கிறோம். உங்களில் யாருக்காவது டிசம்பர் 31-ம் தியதிக்குள் கிடைக்காவிட்டால் தயவு செய்து அதை அற்பமாய் எண்ணாமல் எங்களுக்கு தகவல் தெரிவியுங்கள், நன்றி.

வெறுமையான பலிபீடத்தின் மேல் அக்கினியை எதிர்பார்க்க முடியாது.

தேவனுக்குக் கீழ்ப்படியாத ஏதேனும் ஒரு பகுதி நம் வாழ்வில் காணப்பட்டால் அக்கினி இறங்குவதை எதிர்பார்க்க முடியாது.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

நம்மை தேவனுக்கு முன்பாகத் தாழ்த்தி இரக்க ஆசனத்துக்கு முன்பாக வந்து கெஞ்சினால் எந்த மனிதரும் செய்யமுடியாத உதவியை அவரிடம் பெறலாம்.

பழைய ஏற்பாட்டில் அக்கினி தேவ பிரசன்னத்திற்கு அடையாளமாயிருந்தது போல புதிய ஏற்பாட்டின் காலத்தில் அது தூய ஆவியானவரின் பிரசன்னத்தையும் வல்லமையையும் காண்பிக்கிறது.

மக்களை இழுத்துக் கொள்ளும் அளவில் அக்கினி எரியாததால், அழிந்து கொண்டிருக்கும் உலகத்திற்குக் கிறிஸ்தவனோ சபையோ எந்தத் தாக்கமும் ஏற்படுத்த முடியவில்லை.

தேவனுக்குக் கீழ்ப்படியாத ஏதேனும் ஒரு பகுதி நம் வாழ்வில் காணப்பட்டால் அக்கினி இறங்குவதை எதிர்பார்க்க முடியாது.

ஒரு விசுவாசியில் அக்கினி இறங்கினால் 10 வருடங்களாக சாதிக்க முடியாத வைகளை, அவன் 10 நிமிடங்களில் சாதிக்கக் கூடும்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason